இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்பு திட்டம் 2006
தொடர் மதிப்பீட்டு பரீட்சை 1 மட்டம் 6
LWU 4324 /4313– வர்த்தகச் சட்டம்
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 06.09.2006 நேரம்: பி.ப 3.00 - பி.ப 3.40

ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. இல 11 1896ஆம் ஆண்டு பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொருட்களின் விற்பனை ஒப்பந்தம் என்ற பதத்திற்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணம், பொருட்கள் விற்பனை தொடர்பான ஒப்பந்தம் மற்றும் பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றுடன் மிக நெருக்கமாக ஒத்து காணப்பட கூடிய ஏனைய கொடுக்கல் வாங்கல்களுக்கிடையேயான வேறுபாடுகளை விளக்குகிறது.

   கருத்துரை செய்க.

2. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களின் சட்ட விளைவுகளை தீர்மானிக்க உமது விடை இயைபான நியதிச்சட்ட ஏற்பாடுகள் தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

   (அ) அமாலினால் தேரந்தெடுக்கப்பட்ட வடிவமைப்புக்கு அமைய உற்பத்தி செய்யப்படும் ஒரு தங்க கழுத்தணியை அமாலுக்கு விற்பனை செய்ய பெக்கர் நகையகம் உடன்பட்டது. இவ் வேலையை அமாலுடைய திருமணத்திற்கு ஒரு நாளைக்கு முன்பு பூர்த்திசெய்வதாக பெக்கர் நகையகம் உடன்பட்டது, தங்க கழுத்தணி உற்பத்தி செய்யப்பட்ட பின்பு துரதிஸ்டவசமாக பெக்கர் நகையகத்தின் முழுக்கட்டிடமும் தீக்கிரையானது.

   (ஆ) WPZJ 2506 என்ற பதிவிலக்கத்தைக் கொண்ட டொயாட்டா கார் ஒன்றை வருணவிடம் கொள்வனவு செய்ய சரத் உடன்பட்டான். எவ்வாறாயினும் ஒப்பந்தம் செய்யபட்ட நேரத்தில் கார் திருடப்பட்டது.

   (இ) குமார் தனது மினிமைனர் காரை பிசாரவுக்கு விற்பனை செய்யும் உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட்டான். பிரசித்திப்பெற்ற வாகன மதிப்பீட்டாளர் ஜெகநாதன் என்பவரால் காரிற்கு ஒரு குறிப்பிட்ட விலை தீர்மானிக்கப்பட வேண்டும் என இரு திறத்தவரும் உடன்பட்டனர். எவ்வாறாயினும் ஜெகநாதன் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்ற வில்லை.

(பதிப்புரிமை பெற்றது)